செ.வெ.எண்:59/பிப்ரவரி நாள்: 29.02.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பாக சமுதாய அடிப்படையிலான பேரிடர் அபாய மேலாண்மைத் திட்டத்தின் கீழ் கடலோர கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள முதலுதவிக் குழுக்களுக்கான முதலுதவிப் பயிற்சி**

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பாக சமுதாய அடிப்படையிலான பேரிடர் அபாய மேலாண்மைத் திட்டத்தின் கீழ் கடலோர கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள முதலுதவிக் குழுக்களுக்கான முதலுதவிப் பயிற்சி இன்று (29.02.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் திரு.மு.அலி அக்பர் அவர்கள் முன்னிலை வகித்தார்.

பயிற்சியைத் துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:

தமிழகத்தில் உள்ள பிற கடலோர மாவட்டங்களை விட இராமநாதபுரம் மாவட்டமானது நீண்ட கடற்கரையைக் கொண்டுள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள மொத்த மக்கள் தொகையில் 22% (சுமார் 1,71,722) பேர் கடல் மற்றும் கடல் சார்ந்த தொழிலை நம்பியுள்ளனர். நமது மாவட்டத்தில் சுமார் 180 கிராமங்கள் கடலையொட்டி இருப்பதனால் அடிக்கடி பேரிடர்கள் இக்கிராமங்களில் ஏற்படுகின்றன. இதனால் அப்பகுதி மக்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர். இதன் காரணமாக பல்வகை பேரிடர்களின் அபாயத்தைக் குறைக்கும் பொருட்டு தமிழ்நாடு அரசு உலக வங்கி நிதியுதவியுடன் "சமுதாய அடிப்படையிலான பேரிடர் அபாய மேலாண்மைத் திட்டம்" எனும் திட்டத்தை இராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த ஆண்டு முதல் செயல்படுத்தி வருகின்றது. ஒவ்வொரு கிராமத்திலும் தன்னார்வலர்களைக் கொண்டு தலா 5 உறுப்பினர்கள் வீதம் சுமார் 139 கிராமங்களில் முதலுதவி அணிகள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் முதற்கட்டமாக இன்று (29.02.2016) முதல் முறையாக இந்த முதலுதவிப் பயிற்சி துவங்கப்பட்டுள்ளது.

முதலுதவி அணியின் உறுப்பினர்கள் திறம்பட செயல்பட்டு பேரிடர் தாக்கத்தினால் உள்ளூர் மக்களுக்கு எந்தவித உயிர் சேதமோ கால்நடை பாதிப்போ அல்லது பொருட்சேதமோ ஏற்படா வண்ணம் முனைப்பாக திட்டமிட்டு செயல்படுவதை உங்களுடைய கடமையாகக் கொண்டு பணியாற்ற வேண்டும். இதற்கென ஒரு வார கால முயற்சியில் கிராம பேரிடர் மேலாண்மைத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த உயிர் காக்கும் அரிய பணியில் உங்கள் அனைவரையும் ஈடுபடுத்தி கொண்டு சமூக ஒற்றுமையுடன் சாதி, மதம், இனம், ஏழை, வசதி படைத்தோர் என்ற பாகுபாடு இல்லாமல் அனைவரும் ஒன்றிணைந்து பேரிடரை திறமையாக மேலாண்மை செய்வோம் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசினார்.

இப்பயிற்சியில் இராமநாதபுரம் மாவட்ட திட்ட அலுவலர்(CBDRM) திரு.க.ஆறுமுகம், காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர் பேராசிரியர்.இராம.மாணிக்கம், காரங்காடு ஊராட்சித் தலைவர் மற்றும் முதலுதவிக்குழு ஆலோசகர் திரு.ஜெ.அந்தோணி கிளாரட் , மாநில ஊரக வளர்ச்சி நிறுவன ஆலோசகர் திரு.பேட்ரிக் உட்பட அரசு அலுவலர்கள், முதலுதவிக்குழுக்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**